Source: *Tamil Murasu,* p2
Date: 3 June 2015

# முதுமை பிரச்சினைகளை ஆராய புதிய நிலையம்

முதுமையில் தாக்கத்தை ஏற்படுத்தும் சமூக, மருத்துவ சூழல்களை ஆராய புதிய ஆய்வு நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

'கேர்' என்று சுருக்கமாக அழைக்கப்படும் மூப்படைவது பற்றிய டியூக்–என்யுஎஸ் ஆய்வு, கல்வி நிலையத்தை பற்றிய விவரங்களை சுகாதார மூத்த துணை அமைச்சர் டாக்டர் ஏமி கோர் நேற்று வெளியிட்டார்.

இந்தப் பல்நோக்கு ஆய்வு நிலையத்தில் சமூக அறிவியல், பொறியியல் துறைகளைச் சேர்ந்த ஆய்வாளர்களுடன் மருத்துவ, உயிரியல் அறிவியல் அறிஞர்கள் பணியாற்றுவார்கள் என்றார் அவர்.

நான்கு கருப்பொருட்களில் 'கேர்' கவனம் செலுத்தும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

சமூக ஒருங்கிணைப்பு, சுகாதாரம்; பராமரிப்பு, குடும்பம்; வேலை; சமூக ஈடுபாடு ஆகியன அந்த நான்கு கருப்பொருட்கள் என்று அவர் பட்டியலிட்டார்.

நிலையத்தின் கண்டுபிடிப்புகள், வாழ்க்கைச் சூழல்களை எப்படி அமைத்துக் கொள்ளலாம் என்பதை நிர்ணயிப்பதில் கொள்கை வகுப்பாளர்களுக்கும் நகரத் திட்ட நிபுணர்களுக்கும் உதவும் என்றும் அவர் சொன்னார்.

ஆரோக்கிய வாழ்வின் ஆயுட்காலம் பற்றிய தொடக்க மாநாட்டில் அமைச்சர் ஏமி கோர் பேசினார்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.